1096

சுயம்பிரகாசத் துணை.

சந்துருசகாயம்.

திருவாரூர்—மடப்புரம்

ஸ்ரீ தெட்சணாமூர்த்தி சுவாமிகள்

20 NOV 1924

இரண்டாவது

# பத்திரசக்கிதம்.

உலகப் பிரக்கியாதிபெற்ற

வேதாந்த பாஸ்கரன் முதலான நூற்களின்

ஆசிரியரும்,

கருணாநிதி அச்சுக்கூடத்தின் அதிபருமாகிய

ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்கள்

திருவாய்மலர்ந்தருளியதை

விஜயபுரம் :

"கருணாநிதி அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

---

இரண்டாம்பதிப்பு.

---

ஜிஸ்தர் காப்பிரைட். [Reserved.

1924 [அணா 1.

Q23:417
N24
181880.

புலவர்கள் நாயகம் பொன்னடி சரணம்.

## திருவாரூரைச்சேர்ந்த மடப்புரம்

# ஸ்ரீ தெட்சணாமூர்த்தி சுவாமிகள்மீது

## ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய (இரண்டாவது)

# பத்திரசக்கீதம்

### காப்பு—வெண்பா.

கற்றவஞ்சே ராமற் கருணா நிதியாக
நற்றவஞ்சேர்க் குந்தெட்ச ணாமூர்த்திக்—கொற்றவன்மேல்
பத்திரசக் கீதமதைப் பாடுதற்கு ஓங்கார
முத்திமுத லைப்பணிவா முன்.

### நூற்பயன்.

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ வென்றபடி
சொல்லெல்லாம் வேதாந்தச் சொல்லாமோ—பொல்லாத
பாடல்களைப் பாடாதே பத்திரசக் கீதமதைப்
பாடினால் நாடியதாம் பார்.

### வெள்ளிமலை யொத்தபல மேடை என்ற மெட்டு.

இராகம்—சிந்துபைரவி, தாளம் ஆதி.

**கண்ணிகள்,**

ரணவிலாச அருட்போதா—பவம்
போக்கியெனை யாட்கொள்ளும் விநோதா—எந்தப்
போதுமுந்தன் பாதமதைக் காதலுடனே துதித்தேன்
பூவே—கற்ப—காவே

காரண மிகுந்ததவ மன்னே—அதி
வீரராமன் பட்டினத்தில் முன்னே—தோட்ட
காந்திமதி கண்குருடாய்ப் பார்ந்தமுடன் தோன்றச்செய்
கண்ணே—ஞான—விண்ணே

மாதவர் வணங்குகிற கீர்த்தி—பெற்ற
மடப்புரம் வளர்குரு மூர்த்தி—சிறு
மைந்தனனைப் பாடுதற்கு சந்தத மருள்செய்பெரு
மானே—எம்பி—ரானே

தேசுலவுகின்ற வேளூரென்று—சொல்வைத்
தீசுவரன் கோவிலிலே அன்று—பாலுந்
தேனுங் குருக்கள் திருட ஏலுங் கணக்கெழுதாத
தேவே—எங்கள்—கோவே

சந்தன பரிமள சுகந்தம்—கொண்டு
வந்தனை புரிபவரானந்தம்—உந்தன்
சன்னதியில் வீற்றிருக்கும் உன்னதஞ்சேர்காட்சி மகா
தவமே—அநு—பவமே

கந்த அரவிந்தமலர்ப் பாதா—எங்கள்
கருணை யானந்தகுரு நாதா—கொடுங்
காலன் அணு காமலுந்தன் காலிணைதந் தாளும்அருட்
கையா—தவ—மெய்யா.

---

சேந்தாழும்பூந்தேன்கமழும் என்ற மெட்டு.

பல்லவி.

கண்டோரெல்லாம் கொண்டாடும்பத
கமல தெட்சணா மூர்த்தியே

18|880

அனுபல்லவி.

தொண்டாக நாடினேனே தோத்திரங்கள் பாடினேனே
தூபங்களாற்றினேன் தீபங்களேற்றினேன்
சோபமும் கோபமும் பாவமு மாற்றினேன் (கண்)

சரணங்கள்.

ர்குடி கோவிலர்ச்சகர் மதித்திடாமல் பேசவே
பின் மனைவிசெத்த அற்புதத்தை உடனுரைத்த

ஆண்டகையே நினை வேண்டிப்பணிந்த என்
ஆதங்கநீக்கிச் சுகானந்தம் சேர்த்தருள் (கண்)

காயாங்குளத்துக் கமலமேல்வளர் கருணையானந்த நாயகர்
மாயா விநோதமில்லா வாழ்வின் உபாயம் சொல்லா

மௌனமேது வழியை ஓது
மைந்தனிடத்தில் வா இப்போது (கண்)

---

## பாலாபிஷேகப் பழநிமலையப்பன் என்ற மெட்டு.

இராகம்—சிந்துபைரவி, தாளம்—சாப்பு.

### பல்லவி.

தேனுபிஷேகம தினம் தினம் செய்து
சிறந்தகுரு தெட்சணாமூர்த்தி (தே)

### அநுபல்லவி.

ஞானதேயானந்த வானோர்களே தந்த
நவரத்ன மண்டபமே நேர்த்தி (தே)

### தொகையறு.

கோனே மஹானே பிரானே பெம்மானே
நானே சம்தானே செய் தேனே பூமானே

### மூடு.

குருபரனெனுமவ ருளமமர் பூமான்
திருவருள் பொருளென நினைபவர் சீமான்
கோலன் அநு கூலன்
சீலன் பரி பாலன்
கொங்கு கமழ் பாத பங்கயத்தான்

### தொகையறு.

காதலோ டாதுலர் மீதிலருள் நீதன்
நாதசங் கீதலய வேதமுணர் போதன்

ழுதே.

கருணை புரியருணைக் கடவுளின் வடிவாய்க்
கலைக ளுணர்வரிய மறைகளின் முடிவாய்க்

கருணையா னந்தமே
அருளும்பர பந்தமே
கண்டென்று கொண்டுமெய் கண்டவனே (தே)

---

## சாமளா நீல கோலாகல என்ற மெட்டு.

இராகம்—நவரோஸ், தாளம்—சாப்பு.

**கண்ணிகள்.**

தேவர்வணங்கும் சிவானந்த தெட்சணாமூர்த்தி—மலர்ச்
சேவடியைத்தந்து செய்யடி யேனிஷ்ட பூர்த்தி.

காட்டில் மிளிர்புதுக் கோட்டை தாசில்தாரின் காசம்-தீர்த்த
நாயகனே செய்வாய் நாளும்என்மேல் விசுவாசம்.

சாமிநாத செட்டியார் மகளாம் விசா லாட்சி—படும்
சண்டாள மேகரோகம் போகச்செய்ததே மாட்சி.

பின்னரும் என்னடி வேணுமென்றன்புடன்-கேட்க-அவள்
உன்னடியே வேணுமென்றுசொல்லி வுயிர் மீட்க.

நன்மை மிகுந்திருக்கோகர்ணம் செல்வழிப் பேயன்-தன்னை
புன்னகை கொண்டின்னல் போக்கும் நீ தெய்வசகாயன்.

ஆகையினாலென்னை ஆண்டருள் செய்வதுன் பாரம்-உமக்
காயிரங்கோடி நமஸ்காரம் செய்தேன் இந்நேரம்

நாகங் குடைப்பிடிக்கும்படியாயுள்ள நாதா—சிவ
ஞானகருணை யானந்த மெய்யோக விநோதா.

---

# பத்திரசக்கீதம்.

ரத்னாங்கி பார்ஸி தருபான் என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி, தாளம்—ஆதி.

பல்லவி.

நீயே துணையையனே—எற்கு (நீயே)
நிதமே வருவாய் பதமேதருவாய் நின்மலசுகமவுன (நீ)

அனுபல்லவி.

மாயமிகு பூமிமீதில் தோயமேற்குமிழியான
காயநிலை பல்லவென்று சேயன்மிக வாடுகிறேன் (நீ)

சிந்தாகுலந்தீரையா—என் (சிந்)
திருவே மருவே குருவே தருவே சிதமதிப்பாலருந்தி (சிந்)

வந்தாண்டருள்புரிய மனதுமுனக்கில்லையா
மரணபயந்தவிர்க்க கருணை யானந்த நாம (நீ)

எப்போது தானிரங்குமோ—மனம் (எப்)

இறையே துரையே கருணை நிதியே
இன்னும்வாரா தென்ன மாயம் (எப்)

எப்போதும் உன்னடியை தப்பாமலே வணங்கும்
எந்தாதரவளிக்க நற்காரண மிருந்த (நீயே)

---

ஐயா பழநிமலை வேலா என்ற மெட்டு.

இராகம்—சகானா, தாளம்—ஆதி.

கண்ணிகள்.

வன்மீகபுரம் வளர் பதியே—எந்தன்
வார்த்தைக் கருள் தயா நிதியே
வன்மை மிகுந்த பாகதியே—அருள்
வான மண்டலத்தின் மதியே—திரு

நன்மை செய்தா லுனக்குச் செலவோ—புகழ்
நானும் உனதுபிள்ளை யலவோ
இன்னம் உனக்குநான் சொலவோ—எனக்
கிரங்கி டாமல்வேலை பலவோ—திரு (வன்)

பாவக் கடல்கடத்தும் கலமே—தொண்டர்ப்
பயிர்கள் வளரும்தெய்வ நிலமே—சிறு
பாலன் நினது அடைக் கலமே—கண்
பார்த்து நீயருள்செய் நலமே—திரு (வன்)

நல்லோர்கள் யாவருக்கும் சொந்தம்—ஞானம்
ஞான கருணையா னந்தம்—அருட்
கல்வி யுடையபிர பந்தம்—தனைக்
காத லோடுசொன்ன தனந்தம்—திரு (வன்)

---

அமாரே நபிதேரா என்ற மெட்டு.

இராகம்—அமீர்கல்யாணி, தாளம்—ஆதி.

பல்லவி.

குருமணியே அன்பு கொண்டாள வேணும் (குரு)

அநுபல்லவி.

தரும குணவிலாச சாதுகள் மீதுநேச
பரமசுகானந் தத்தைப் பாலனுக்குபதேச (குரு)

தொகையறா.

ஆலம் படைத்தவிழி ஏலம் படைத்த குழல்
அரிவையர்கள் காத லாலே
ஆலைக் கரும்புபோல் வேலைத் துரும்புபோல்
ஆகினேன் பூமி மேலே

# பத்திரசக்கீதம்.

ஆகையால் பாசவலை அறுத்தகற்றென்கவலை
யோகசைதன்ய நிலை இயம்பிமயக்கந்தொலை (குரு)

தொகையறு.

வேதாந்த சித்தாந்த சமரச சுகந்தீத
விமலசாட்சாத்கார யூகா
விஞ்ஞான பதமுடைய மெய்க்கருணையானந்த
வேத வேதாந்த யோகா

மேலோர் புகழ் விவேகா வித்தகர்தம் சிநேகா
வாலையருட்பிரவாகா வரமளிக்கும் தியாகா (குரு)

---

பஹாரியாலோ·தேக்கோ என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் பியாக், தாளம்—ஆதி

பல்லவி.

மஹானுபாவா சொந்த மைந்தன்முன் வாவா

சரணுபல்லவி.

அகாரமோ டுகாரமும் மகாரமே மெய்ஞ்ஞான
சுகோதயப் பிரணவ சொரூபமோன—பரஞ்
சோதியான (மஹா)

ஆசையோடு மெய்க்கருணை யானந்தம் கொண்டேனே
வாசியோ டுலாசமான வாழ்வை நானே—கண்டு
மகிழ்ந்தேனே

---

## காரணக் கும்மி.

செல்வமிகுந்த மடப்புரமாநகர்த்
தெட்சணாமூர்த்திமேல் கும்மிசொல்ல
கல்விக்கருட்பொருள் நல்குமூலாதாரக்
ஜகப்புலிபொற்பதங் காப்பாமே. 1

மல்லிகைமுல்லை மலர்க்கொடிசூழ்ந்த
மடப்புரமாநகர் வாழ்மூர்த்தி
நல்லதமிழ்க்கும்மி சொல்லமயிலேறும்
ஞானவடிவேலன் காப்பாமே 2

வெள்ளைக்கமலத்தும் வீற்றிருப்பாளெந்தன்
உள்ளக்கமலத்தும் வீற்றிருப்பாள்
தெள்ளுதமிழ்க்கறு கூலிசரஸ்வதி
செய்யபொற்பாதந் துணையாமே. 3

தென்னவிர் ஆஞறைச் சேர்ந்தமடப்புர
தேசிகன்மேற்கும்மிப் பாட்டுரைக்கத்
தன்னைய[illegible]ந்தா தலைவனைப்பாரென்ற
சற்குருபொற்பதம் போற்றிடுவாம். 4

தெட்சணாமூர்த்தி பிறப்புவளர்ப்பையும்
செய்தகோர் அற்புதம் யாவற்றையும்
பட்சமுடன்சவிஸ் தாரமதாகவே
பாடிவருகிறேன் கேள்மயிலே. 5

தேசம்புகழும் திருச்சிறைப்பள்ளியைச்
சேர்ந்தகீழாலத்தூர்ச் சிற்றூரில்
வாசம்புரிசிவ சிதம்பரம்பிள்ளையும்
மங்கைமீனம்பிகை யம்மாளும். 6

செய்ததவத்துக்குக் கருணைசலேஸ்வரர்
சேயாகவந்தவ தாரஞ்செய்தார்

ஐயமில்லாமல் அவர்திருநாமம்
அருணாசலமென்று சூடினரே. (7)

ஐந்துவயது வரையிலும்பேசாமல்
அன்னமே ஊமையைப் போலிருந்தார்
அந்தவிதம்பரி காரமதாக
அருணாசலேஸ்வரர் வந்தனரே (8)

வந்ததுறவி குழந்தையை நோக்கியே
மைந்தனேநீயா ரென்றுரைத்தார்
நந்தலிலாமலே நீயேநானென்றும்
நானேநீயென்றும் பேசினராம். (9)

தந்தைதிருச்சிறைப் பள்ளிக்குப்போய்வர
தானெண்ணிவந்து விடைகேட்கப்
பந்துக்களின்றும்மைத் தேடியிருவர்கள்
பார்க்கவருகிறா ரென்றனராம். (10)

பின்னவர்தில்லைக்குப் போகவிடைகேட்க
பெற்றபிதா விடத்தில்உமது
அன்னையும்நானேக் குயிர்நீப்பாளென
ஆச்சரியப்படச் சொன்னாராம். (11)

கல்விபோதிக்கும் உபாத்தியார்பிள்ளையின்
கையொடிந்தவிதம் சொன்னதுடன்
செல்வமிகுந்தம்பி பிள்ளையார்கோவிலில்
தேங்காயெடுத்ததும் கூறினராம். (12)

ஆராவமுதையங் காருக்குப்பிள்ளை
அவதாரமாக அருள்புரிந்து
போனபிள்ளையை வீட்டில்நெருப்பு
பிடிக்கவிரைந்து காப்பாற்றினராம்.

பள்ளியில்தன்னுடன் கல்விபயின்றவோர்
பார்ப்பனப்பையன் விஷந்தீண்டி
துள்ளியிறக்க பிரம்பாலடிக்கவும்
தூங்கினமாதிரி யாயெழுந்தான். (14)

தந்தைமனைவி பிரேதத்தைப்பாராத
தன்மைமரணம் வரவேண்ட
சிந்தையுடனிரு பேருக்கும்வெண்பொடி
தீட்டிச்சிவபதம் சேர்த்தனரே. (15)

நீடா மங்கலம் நாயக்கப் பையனை
நீண்டதோர் சர்ப்பம் கடிக்கவர
நாடிச் சர்ப்பத்தைக் கையமர்த்தி இது
நல்லபிள்ளை யென்று கூறினரே. (16)

பாம்பின் பயத்தால் வீட்டுக்குப் போகப்
பயந்தவ னுக்குத் துணையாகப்
போம்படி காட்டிச் சடாமுனிக் குத்தரம்
புரிந்த தற்புதம் பார்மயிலே. (17)

கட்டிக் கரும்பே பழங்களத் தூரிலே
கண்ப மிகும்உடை யார்மனைவி
பட்ட பிரசவ வேதனை நீக்கியோர்
பாலன் பிறப்பனென் றோதினரே. (18)

நீலப் பாடியில் தம்பிக்குப் பாடம்
நிகழ்த்தும் பெரியவர் சொல்நிறுத்த
ஓலை தரச்சிவ ஞானபோத சிந்தம்
உடன் வரைந்து கொடுத்தனரே. (19)

அந்தநல் ஊரில் முதலியார்க் கைம்பது
ஆண்டின் பிறகுவோர் ஆண்மகவு

சிந்தை மகிழ அவதரிக் கச்செய்த
சீமானைப் போற்றுவாய் பைங்கிளியே. (20)

சென்னை திருவொற்றி யூர்நகர்ப் பார்ப்பனச்
செல்விக்குத் துட்டப் பசாசத்தினால்
இன்னல் மிகவதை நீக்கிப் பாமுத்தி
இன்ப நிலையுப தேசஞ்செய்தார். (21)

தீனவர் வாழ்கின்ற காரைக்கால் மஸ்தான்
செப்பிய எங்கும் நிறைபொருட்கு
நான்நீ அதுஇது என்கிற சுட்டறால்
நாடி யிருக்[illegible] மென்றனரே. (22)

சிற்சபை யாகிய தில்லை நடராஜர்
தெட்சணா மூர்த்திப் பெயர்கொடுக்க
சற்சனர் கட்கருள் செய்த தயாநிதி
தாளிணை போற்றுவாய் பெண்மயிலே. (23)

நாகைச் சுப்பபிள்ளை முத்துப்பேட் டைக்காட்டில்
நடக்கக் கள்வர்கள் தான்மறிக்க
வாகுடன் வீரனைப் போவென்று கூறிய
மாதவர் பாதம் வணங்கிடுவாய். (24)

தான மாகச் சிலகிரா மங்களைத்
தஞ்சைச் சரபோசி தான்கொடுக்க
கானல் நீரோ களைதீர்க்கு மென்ற
கர்த்தனைப் போற்றுவாய் கண்மணியே. (25)

சிக்கல் பதிப்பழ நியப்ப செட்டியார்
சித்த மகிழ்வுடன் செய்ததொண்டின்
பக்குவங் கண்டு சிவஞான யோக
பதமுறச் செய்தனர் பைங்கிளியே. (2

பாதி மதிச்சடை ஆரூர்த் தியாகர்
பவனிக்கு வந்தசன் யாசிகள்தான்
மாதவ ராகிய தெட்சணா மூர்த்தி
மகிமையைக் கேட்டு மகிழ்ந்தார்கள். (27)

மகிழ்ந்த பிராமணச் சன்னியாசி தம்
மரபினர்க் காகப் பயந்துநின்று
பகலவன் வெய்யிலில் வீற்றிருக் கார்ஒரு
பைந்தரு வுண்டெனில் நன்மையென்றார். (28)

சேதன மாகிய ஆன்மா வுக்கு
அசேதன மாகும் விருட்சத்தினால்
ஏது சுகமென்று சன்யாசி முற்றும்
இறும்பூ தெய்த இயம்பினரே. (29)

இந்தப் பாகத்தில் சொல்லாத காரணம்
எல்லா வற்றையும் இன்பமுடன்
முந்தின பாகத்தில் சொல்லி யிருப்பதால்
முறையாய்ப் பார்த்துணர் கண்மணியே. (30)

சிம்மரவிவரும் உத்தரநாளினில்
செய்யும் குருபூசைக் காலத்திலும்
நன்மை மிகுங்குரு வாரத்திலும் வந்து
நாடித் தெரிசிப்பாய் ஞானப்பெண்ணே. (31)

சித்தர்கள் போற்றிடுந் தெட்சணாமூர்த்தி
திருவருவத்தை தியானஞ்செய்து
நித்தமுபாசனை செய்துநீபோற்றினால்
நினைவில்கா ணுவாய் பைங்கிளியே. (32)

சம்பூரணம்.

மூன்றும் பாகத்தை வாங்கிப்பாருங்கள்.

கருணாநிதி பிரஸ், விஜயபுரம்—24 RGM